# சிறந்த நூலாசிரியர்கள் - பதிப்பகத்தாருக்கு பரிசு - சான்றிதழ்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, பிப்.15

சிறந்த நூல்களைப் படைத்த நூலாசிரியர்கள் மற்றும் பதிப்பகத்தாருக்குப் பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (14.02.2024) வழங்கினார்.

தனித்துவம் மிக்க நம் தமிழ்மொழியில் சிறந்த நூல்கள் வெளிவருவதை ஊக்கப்படுத்தும் வகையில் 33 வகைப்பாடுகளில் வரப் பெற்ற சிறந்த படைப்புகளை அளித்த நூலாசிரியர்களுக்கும் அந்நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தாரர்களுக்கும் ஆண்டுதோறும் காசோலையும் பாராட்டுச் சான்றிதழும் 1971 ஆம் ஆண்டு முதல் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது.

பேராசிரியர்கள், தமிழறிஞர்களைக் கொண்டு மதிப்பீடு செய்து ஒவ்வொரு வகைப்பாட்டிலும் நூலைத் தெரிவு செய்து அந்நூலை எழுதிய நூலாசிரியர்க்கு ரூ.30,000/ பரிசுத் தொகையுடன் சான்றிதழும், அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்திற்கு ரூ.10,000/ பரிசுத் தொகையுடன் சான்றிதழும் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக வழங்கிச் சிறப்பிக்கப்படுகின்றன.

அவ்வண்ணமே, தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக தமிழுக்குப் புத்தணியாக நூல்களைப் படைக்கும் தமிழ்த் தொண்டர் பெருமக்களுக்குப் பேருக்கம் தரும் வகையில் 2020 ஆம் ஆண்டில் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்ட மரபுக் கவிதை எனும் வகைப்பாட்டில் ஞான கானம் எனும் நூலை எழுதிய சென்னிமலை தண்டபாணி,

பதிப்பித்த கோவை விஜயா பதிப்பகத்தாருக்கும், புதுக் கவிதை எனும் வகைப்பாட்டில் உயர்திணைப் பறவை எனும் நூலை எழுதிய ஆ.செங்கதிர்ச் செல்வன் (கதிர்பாரதி), பதிப்பித்த இன்சொல் பதிப்பகத்தாருக்கும், புதினம் எனும் வகைப்பாட்டில் காலா பாணி எனும் நூலை எழுதிய முனைவர் மு. ராஜேந்திரன், பதிப்பித்த அகநி வெளியீடு பதிப்பகத்தாருக்கும்,

சிறுகதை எனும் வகைப்பாட்டில் வாவ் சிக்னல் எனும் நூலை எழுதிய ராம் பிரசாத், பதிப்பித்த படைப்பு பதிப்பகத்தாருக்கும், நாடகம் (உரைநடை, கவிதை) எனும் வகைப்பாட்டில் புதிய புரட்சிக்கவி எனும் நூலை எழுதிய சா. பன்னீர்செல்வம், பதிப்பித்த பூங்குடில் பதிப்பகத்தாருக்கும், சிறுவர் இலக்கியம் எனும் வகைப்பாட்டில் 100 சிறுவர் கதைகள் எனும் நூலை எழுதிய என்.சி. ஞானப்பிரகாசம் (வானொலி அண்ணா), பதிப்பித்த கற்பக வித்யா பதிப்பகத்தாருக்கும்,

திறனாய்வு எனும் வகைப்பாட்டில் சிலப்பதிகாரம் ஒப்பாய்வுகள் எனும் நூலை எழுதிய முனைவர் மு. அருணாசலம், பதிப்பித்த நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் பதிப்பகத்தாருக்கும், மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி இலக்கணம் எனும் வகைப்பாட்டில் சிந்து வெளியில் முந்து தமிழ் எனும் நூலை எழுதிய நா.ப. பூரண சந்திர ஜீவா (நாகை ப. ஜீவா),

பதிப்பித்த யாழிசைப் பதிப்பகத்தாருக்கும், பிற மொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள் எனும் வகைப்பாட்டில் ஆறாவது பெண் எனும் நூலை எழுதிய ஆ.செல்வராஜ் (குறிஞ்சிவேலன்), பதிப்பித்த அகநி வெளியீடு பதிப்பகத்தாருக்கும், நுண்கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்) எனும் வகைப்பாட்டில் நாடகமும் தமிழிசையும் எனும் நூலை எழுதிய டி.கே.எஸ். கலைவாணன், பதிப்பித்த வானதி பதிப்பகத்தாருக்கும்,

அகராதி, கலைக் களஞ்சியம், கலைச் சொல்லாக்கம், ஆட்சித் தமிழ் எனும் வகைப்பாட்டில் மரபுவழி கலைகளின் கலைச்சொல் அகராதி எனும் நூலை எழுதிய ம. இராசா, பதிப்பித்த அழகு பதிப்பகத்தாருக்கும், பயண இலக்கியம் எனும் வகைப்பாட்டில் கெய்ரோ முதல் ஏதன்ஸ் வரை எனும் நூலை எழுதிய என். யோகானந்த், பதிப்பித்த யோகா சாவித் பப்ளிகேஷன் பதிப்பகத்தாருக்கும்,

வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு எனும் வகைப்பாட்டில் உலகத் தலைவர் அண்ணல் அம்பேத்கர் எனும் நூலை எழுதிய த.சீ. பாலு (குடந்தை பாலு), பதிப்பித்த ஜீவா பதிப்பகத்தாருக்கும், நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிக வழிகளும், அகழாய்வு எனும் வகைப்பாட்டில் தமிழகக் கடல்சார் பொருளாதாரமும் கோர்ச்சுக்கீசிய காலனியமயமாக்கமும் எனும் நூலை எழுதிய க.ஜயப்பன், பதிப்பித்த நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் பதிப்பகத்தாருக்கும்,

கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல் எனும் வகைப்பாட்டில் களிப்பூட்டும் கணிதம் எனும் நூலை எழுதிய கோவி. பழனி, பதிப்பித்த வனிதா பதிப்பகத்தாருக்கும், பொறியியல், தொழில்நுட்பவியல் எனும் வகைப்பாட்டில் வலை வாசல் வருக எனும் நூலை எழுதிய முனைவர் பா. சிதம்பரராஜன் மற்றும் க. சண்முகம், பதிப்பித்த எஸ்.ஆர்.எம். வள்ளியம்மை பொறியியல்கல்லூரிக்கும், மானிடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல் எனும் வகைப்பாட்டில் பாலைத் திணை மரபு கட்டுடைப்பும் அகநானூற்றுக் கட்டமைப்பும் எனும் நூலை எழுதிய முனைவர் வாணி அறிவாளன், பதிப்பித்த அருண் அகில் பதிப்பகத்தாருக்கும்,

சட்டவியல், அரசியல் எனும் வகைப்பாட்டில் சட்டப் பார்வையில் ஆவணங்கள் எனும் நூலை எழுதிய இ. முருகேசன், பதிப்பித்த தமிழ்ச் சுவடி பதிப்பகத்தாருக்கும், பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல் எனும் வகைப்பாட்டில் மியூச்சுவல் ஃபண்ட் எனும் நூலை எழுதிய சோம. வள்ளியப்பன், பதிப்பித்த கிழக்கு பதிப்பகத்தாருக்கும், மருந்தியல், உடலியல், நலவியல் எனும் வகைப்பாட்டில் ஆழ்மன நோய்களும் அற்புதமான சிகிச்சையும் எனும் நூலை எழுதிய மருத்துவர் ராஜராஜன், பதிப்பித்த ராரா புக்ஸ் பதிப்பகத்தாருக்கும்,

தமிழ் மருத்துவ நூல்கள் (சித்தம், ஆயுர்வேதம்) எனும் வகைப்பாட்டில் யோக ஆசனம் அறிவோம் எனும் நூலை எழுதிய ந. அம்ரித்சாம், பதிப்பித்த ஏ.எம். புக் ஹவுஸ் பதிப்பகத்தாருக்கும், சமயம், ஆன்மிகம், அளவையியல் எனும் வகைப்பாட்டில் வாழ்விக்கும் வைணவம் எனும் நூலை எழுதிய எஸ். நாராயணன் (நாவலர் நாராயணன்), பதிப்பித்த வானதி பதிப்பகத்தாருக்கும், கல்வியியல், உளவியல் எனும் வகைப்பாட்டில் வெல்ல நினைத்தால் வெல்லலாம் எனும் நூலை எழுதிய முனைவர் அ. அமல்ராஜ், பதிப்பித்த விஜயா பதிப்பகத்தாருக்கும்,

வேளாண்மையியல், கால்நடையியல் எனும் வகைப்பாட்டில் சுயத்தொழிலுக்கு பன்றி வளர்ப்பு எனும் நூலை எழுதிய திருமதி கு. கைலேஸ்வரி, திருமதி பு. பவித்ரா, த. ரவிமுருகன், பதிப்பித்த ராமையா பதிப்பகத்தாருக்கும், சுற்றுப்புறவியல் எனும் வகைப்பாட்டில் கடலோரக் கழிமுகங்கள் எனும் நூலை எழுதிய பேரா. டாக்டர் அ. அப்துல் ரஹ்மான், பதிப்பித்த வெர்டெக்ஸ் தொழில்நுட்பங்கள் மற்றும் வெளியீடுகள் பதிப்பகத்தாருக்கும்,

கணினியியல் எனும் வகைப்பாட்டில் டிஜிட்டல் இந்தியா எனும் நூலை எழுதிய ஆர். சுதன் (சுதன்), பதிப்பித்த ராஜம் பதிப்பகத்தாருக்கும், நாட்டுப்புறவியல் எனும் வகைப்பாட்டில் கழுகூர் மண்ணின் முகம் எனும் நூலை எழுதிய அ. பழனியப்பன் (கவிஞர் கழுகூர் பழனியப்பன்), பதிப்பித்த தமிழ்சங்கு பதிப்பகத்தாருக்கும்,

வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியம் எனும் வகைப்பாட்டில் நீளிடைக் கங்குல் எனும் நூலை எழுதிய ராஜி வாஞ்சி, பதிப்பித்த படைப்பு பதிப்பகத்தாருக்கும், இதழியல், தகவல் தொடர்பு எனும் வகைப்பாட்டில் தமிழ் வளர்த்த சிற்றிதழ்கள் எனும் நூலை எழுதிய எம். ஆர். ரகுநாதன், பதிப்பித்த ஸ்ரீ செண்பகா பதிப்பகத்தாருக்கும், பிறசிறப்பு வெளியீடுகள் எனும் வகைப்பாட்டில் மகாபாரதம் (வரலாறும் மகிமைகளும்) எனும் நூலை எழுதிய முனைவர் எம்.கே.எஃப். லயன் கு. முத்துராசன், பதிப்பித்த வசந்தா பிரசுரம் பதிப்பகத்தாருக்கும்,

விளையாட்டு எனும் வகைப்பாட்டில் குறுக்கெழுத்து அறிவுத்திறன் எனும் நூலை எழுதிய ம.தி. முத்துக்குமார், பதிப்பித்த கவி நிலா பதிப்பகத்தாருக்கும், மகளிர் இலக்கியம் எனும் வகைப்பாட்டில் மண்ணின் மகள் எனும் நூலை எழுதிய மருத்துவர் பிரியா இராமச்சந்திரன், பதிப்பித்த வானதி பதிப்பகத்தாருக்கும், தமிழர் வாழ்வியல் எனும் வகைப்பாட்டில் அறிவு பற்றிய தமிழரின் அறிவு எனும் நூலை எழுதிய சி. மகேந்திரன், பதிப்பித்த டிஸ்கவரி புக் பேலஸ் (பி) லிட் பதிப்பகத்தாருக்கும்

2021 ஆம் ஆண்டில் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்ட மரபுக் கவிதை எனும் வகைப்பாட்டில் கூ.வ. எழிலரசு கவிதைகள் எனும் நூலை எழுதிய கூ.வ. எழிலரசு, பதிப்பித்த மதியரசன் பதிப்பகத்தாருக்கும், புதுக் கவிதை எனும் வகைப்பாட்டில் தொட்டிலோசை எனும் நூலை எழுதிய கவிஞர் நெல்லை ஜெயந்தா, பதிப்பித்த வாலி பதிப்பகத்தாருக்கும்,

புதினம் எனும் வகைப்பாட்டில் செங்கேணி எனும் நூலை எழுதிய திருமதி ப. அமிர்தவள்ளி, பதிப்பித்த முரண்களரி படைப்பகம் பதிப்பகத்தாருக்கும், சிறுகதை எனும் வகைப்பாட்டில் நெஞ்சினில் கலந்தாய் எனும் நூலை எழுதிய கோ. ஒளிவண்ணன், பதிப்பித்த எழிலினி பதிப்பகத்தாருக்கும்,

நாடகம் (உரைநடை, கவிதை) எனும் வகைப்பாட்டில் விடாதுகருப்பு பெரியாரியல் நாடகங்கள் 5 எனும் நூலை எழுதிய மு. இராசுவாமி, பதிப்பித்த நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் பதிப்பகத்தாருக்கும், சிறுவர் இலக்கியம் எனும் வகைப்பாட்டில் நிறம் மாறியகாக்கா எனும் நூலை எழுதிய சூடாமணிசடகோபன் (ந. கோபிநாத்), பதிப்பித்த ருக்குமணி பதிப்பகத்தாருக்கும், திறனாய்வு எனும் வகைப்பாட்டில் இராமகாதைமுதலும்வழியும் எனும் நூலை எழுதிய முனைவர் தெ.ஞானசுந்தரம், பதிப்பித்த வானதி பதிப்பகத்தாருக்கும்,

மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி இலக்கணம் எனும் வகைப்பாட்டில் பழந்தமிழ் நூல்களில் வினை வழிப் பெயர்கள் எனும் நூலை எழுதிய முனைவர் ச. சுபாஷ் சந்திர போஸ், பதிப்பித்த நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் பதிப்பகத்தாருக்கும், பிற மொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள் எனும் வகைப்பாட்டில் உலகச் செம்மொழிகளும் இலக்கியங்களும் எனும் நூலை எழுதிய முனைவர் ந. அறிவரசன், பதிப்பித்த சாரதா பதிப்பகத்தாருக்கும்,

நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்) எனும் வகைப்பாட்டில் தமிழர் சிற்பக் கலையில் அழகியல் கோட்பாடுகள் எனும் நூலை எழுதிய முனைவர் சு. திருநாவுக்கரசு, பதிப்பித்த தாழிபுத்தகக்கடை பதிப்பகத்தாருக்கும், அகராதி, கலைக் களஞ்சியம், கலைச் சொல்லாக்கம், ஆட்சித் தமிழ் எனும் வகைப்பாட்டில் தமிழ் நாட்டுப்புறவியல் அகராதி எனும் நூலை எழுதிய பேரா. முனைவர் சு. சண்முகசுந்தரம், பதிப்பித்த காவ்யா பதிப்பகத்தாருக்கும்,

பயண இலக்கியம் எனும் வகைப்பாட்டில் வருவதும் போவதும் எனும் நூலை எழுதிய தி. அமிர்தகணேசன், பதிப்பித்த ஒரு துளிக் கவிதை பதிப்பகத்தாருக்கும், வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு எனும் வகைப்பாட்டில் இருளில் உதித்த சூரியன் பெரியார் எனும் நூலை எழுதிய குடந்தை பாலு, பதிப்பித்த ஜீவா பதிப்பகத்தாருக்கும்,

நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிக வழிகளும், அகழாய்வு எனும் வகைப்பாட்டில் ஆற்றங்கரை நாகரிகங்களில் தமிழ்ப் பண்பாடு எனும் நூலை எழுதிய முனைவர் சிவ. இளங்கோ, பதிப்பித்த புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் பதிப்பகத்தாருக்கும்,

கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல் எனும் வகைப்பாட்டில் விண்வெளி மனிதர்கள் எனும் நூலை எழுதிய பெ. சசிக்குமார், பா. அரவிந்த், பதிப்பித்த பாரதி புத்தகாலயம் பதிப்பகத்தாருக்கும், பொறியியல், தொழில் நுட்பவியல் எனும் வகைப்பாட்டில் இஸ்ரோவின் கதை எனும் நூலை எழுதிய முனைவர் ஹரிஹரசுதன் தங்கவேலு, பதிப்பித்த கிழக்கு பதிப்பகத்தாருக்கும்,

மானிடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல் எனும் வகைப்பாட்டில் சிலப்பதிகாரம் இனவரைவியல் நோக்கு எனும் நூலை எழுதிய முனைவர் பெ. சுப்பிரமணியன், பதிப்பித்த காவ்யா பதிப்பகத்தாருக்கும், சட்டவியல், அரசியல் எனும் வகைப்பாட்டில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 எனும் நூலை எழுதிய வடகரைசெல்வராஜ், பதிப்பித்த ரேவதி பப்ளிகேஷன்ஸ் பதிப்பகத்தாருக்கும்,

பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல் எனும் வகைப்பாட்டில் இந்தியப் பொருளாதாரம் வரலாறும் காட்டும் வழிகள் எனும் நூலை எழுதிய ஆ. அறிவழகன், பதிப்பித்த சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் பதிப்பகத்தாருக்கும், மருந்தியல், உடலியல், நலவியல் எனும் வகைப்பாட்டில் தாய்சேய்க்கான சத்தான உணவுகள் எனும் நூலை எழுதிய மரு. க. இராஜேந்திரன், பதிப்பித்த உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம் பதிப்பகத்தாருக்கும்,

தமிழ் மருத்துவ நூல்கள் (சித்தம், ஆயுர்வேதம்) எனும் வகைப்பாட் டில் உணவுமொழி எனும் நூலை எழுதிய மரு. வி. விக்ரம்குமார், பதிப்பித்த பேசாமொழி பப்ளிகேஷன்ஸ் பதிப்பகத்தாருக்கும், சமயம், ஆன்மிகம், அளவையியல் எனும் வகைப்பாட்டில் வடஇந்திய புனிதப் பயணங்கள் எனும் நூலை எழுதிய மரு.நா. மோகன்தாஸ், பதிப்பித்த இமாலயா பதிப்பகத்தாருக்கும், கல்வியியல், உளவியல் எனும் வகைப்பாட்டில் நுண்ணுயிர் எதிரி கொரோனா ஓர் சமூக உளவியல் கண்ணோட்டம் எனும் நூலை எழுதிய கு. நித்தியானந்தன், பதிப்பித்த இனிய நந்தவனம் பதிப்பகத்தாருக்கும்,

வேளாண்மையியல், கால்நடையியல் எனும் வகைப்பாட்டில் தமிழக கால்நடைகள் எனும் நூலை எழுதிய முனைவர் சு. உஷா, முனைவர் ந. குமாரவேலு, பதிப்பித்த ராமையா பதிப்பகத்தாருக்கும், சுற்றுப்புறவியல் எனும் வகைப்பாட்டில் இயற்கை எனும் நூலை எழுதிய மு. செகசோதி, பதிப்பித்த கோரல் பப்ளிஷர்ஸ் அண்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் பதிப்பகத்தாருக்கும்,

கணினியியல் எனும் வகைப்பாட்டில் மொழியியலும் கணினி மொழியியலும் எனும் நூலை எழுதிய ந. தெய்வசுந்தரம், பதிப்பித்த அமுதநிலையம் பதிப்பகத்தாருக்கும், நாட்டுப்புறவியல் எனும் வகைப்பாட்டில் கட்டபொம்மு கதைப் பாடல்: வாய்பாடும் அடிக் கருத்தும் எனும் நூலை எழுதிய முனைவர் ஆ. திருநாகலிங்கம், பதிப்பித்த சகசானந்தா பதிப்பகத்தாருக்கும்,

வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியம் எனும் வகைப்பாட்டில் பயங்கரவாதி எனும் நூலை எழுதிய தீபச்செல்வன், பதிப்பித்த டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ் பதிப்பகத்தாருக்கும், இதழியல், தகவல் தொடர்பு எனும் வகைப்பாட்டில் அந்த நிருபரின் பேனா எனும் நூலை எழுதிய ஆர். நடராஜன், பதிப்பித்த கவிதா பப்ளிகேஷன் பதிப்பகத்தாருக்கும்,

பிறசிறப்பு வெளியீடுகள் எனும் வகைப்பாட்டில் முடங்கலில் மலர்ந்த மலர்கள் எனும் நூலை எழுதிய பேரா. தி.இராசகோபாலன், பதிப்பித்த வானதி பதிப்பகத்தாருக்கும், விளையாட்டு எனும் வகைப்பாட்டில் விளையாட்டு உலகின் பிதாமகன்கள் எனும் நூலை எழுதிய திருமதி உ. சந்திரா, பதிப்பித்த பிராம்ப்ட் பதிப்பகத்தாருக்கும்,

மகளிர் இலக்கியம் எனும் வகைப்பாட்டில் பெண்ணியல் அன்றும் இன்றும் எனும் நூலை எழுதிய பேரா. திருமதி தாயம்மாள் அறவாணன், பதிப்பித்த தமிழ்க் கோட்டம் பதிப்பகத்தாருக்கும், தமிழர் வாழ்வியல் எனும் வகைப்பாட்டில் சங்கத் தமிழும் தமிழர் சமயமும் எனும் நூலை எழுதிய புலவர் கு. இரவீந்திரன், பதிப்பித்த காவ்யா பதிப்பகத்தாருக்கும்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்களால் நேற்று (14.02.2024) புதன்கிழமை சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற விழாவில் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சி தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் முனைவர் இல.சுப்பிர மணியன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

---

பக்தர்கள் தரும் காணிக்கை நகைகளை உருக்கி சேமிப்பு வைக்கும் திட்டம்! தற்போது ஆண்டுக்கு ரூ.6 கோடி வருமானம்!

# திட்டம் முழுமை பெறும் போது - ரூ.25 கோடி வருமானம் கிடைக்கும்!

## சட்டப்பேரவையில் - கோவி. செழியன் கேள்விக்கு - அமைச்சர் பி.கே.சேகர்பாபு விளக்கம்!



சென்னை, பிப். 16 -

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது, நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**அரசுக் கொறடா கோவி. செழியன் :** இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்கள் தரும் காணிக்கை நகைகளை உருக்கி சேமிப்பு வைப்பு திட்டத்தில் வைத்து அரசு திட்டத்தைச் செயல்படுத்துகிறதா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** முத்தமிழ் வித்தகர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் வெளியிடப்பட்ட அரசாணையின்படி, திருக்கோயில்களுக்குக் காணிக்கையாக வருகின்ற பயன்பாட்டில் இல்லாத பல மாற்று பொன்னினங்கள் 2006-ஆம் ஆண்டு முதல் 2010-ஆம் ஆண்டு வரை அவற்றை உருக்கி தங்க முதலீட்டுத் திட்டத் தில் முதலீடு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கடந்த 10 ஆண்டுகளில் அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்ததால் பல்வேறு திருக்கோயில்களில் நூற்றுக் கணக்கான கிலோ கிராம் எடைகொண்ட பலமாற்று பொன் இனங்கள் தேங்கி இருந்தது. இதனை அறிந்த முதலமைச்சர் அவர்கள் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுவரையில் 5 திருக்கோயில்களின் பயன்பாடற்ற பலமாற்று பொன் இனங்களை ஒன்றிய அரசுக்கு சொந்தமான உருக்காலையில் உருக்கி பாரத ஸ்டேட் வங்கியில் ரூ.191.65 கோடி மதிப்பீட்டிற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் கிடைக்கப் பெறும் வட்டித் தொகை ஆண்டிற்கு ரூ.4 கோடியே 31 லட்சமாகும்.

மேலும் 10 திருக்கோயில்களின் சுமார் 156 கிலோ எடையுள்ள பயன்பாடற்ற பலமாற்று பொன் இனங்கள் ஒன்றிய அரசின் தங்க உருக்காலைக்கு அனுப்புவதற்கு தயார் நிலையில் உள்ளது. அவை வருகின்ற 20-ஆம் தேதி அனுப்பி வைக்கப்படும்.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது பல்வேறு இடங்களில் பல்வேறு விமர்சனங்கள் வந்தன. ஆனால் இந்தத் தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில்களின் வருவாயைப் பெருக்குவதற்காக இத்திட்டத்தை மூன்று ஓய்வு பெற்ற நீதிபதிகள் தலைமையில் செயல்படுத்துவதற்கு ஆணையிட்டதன் காரணமாக இன்று திருக்கோயில்களுக்கு ஆண்டிற்கு சுமார் ரூ.6 கோடி வருமானம் கிடைப்பதோடு, இந்த திட்டம் முழுமை பெறுகின்றபோது

ரூ. 25 கோடி அளவிற்கு ஆண்டிற்கு வட்டித் தொகையின் மூலம் வருமானமாக கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதிலளித்தார்.

---

உரிமையியல் நீதிபதியாகத் தேர்வு –

# பழங்குடி இனத்தைச் சேர்ந்த திருமதி ஸ்ரீபதிக்கு வாழ்த்துக்கள்!

## சட்டப் பேரவையில் - பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



**சென்னை, பிப். 16 -**

**சட்டப் பேரவையில், நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது பதிலளித்த பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, உரிமையியல் நீதிபதியாகத் தேர்வாகியுள்ள பழங்குடி இனத்தைச் சேர்ந்த திருமதி ஸ்ரீபதிக்கு தமது வாழ்த்துகளைத் தொடங்கி வைத்தார்.**

**மேலும் அவர் பதிலளிக்கையில், "திருமங்கலத்தில் மாவட்ட கல்வி கலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் பணி விரைவில் தொடங்கும்" என அறிவித்தார்.**

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஆர்.பி. உதயகுமார்:**

திருமங்கலம் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:**

கல்விக்கு முக்கியத்துவம், தாய்மொழிக்கு முக்கியத்துவம், தமிழ்மொழியில் கல்வி பயின்று இன்றைக்கு முதன்முறையாக ஒரு பழங்குடி இனத்தைச் சார்ந்திருக்கின்ற திருமதி ஸ்ரீபதி என்பவர் உரிமையியல் நீதிபதியாக தேர்வு பெற்றிருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லும்போது அதற்கான அரசாணையாக தமிழ்மொழியில் படிப்பவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்கின்ற அந்த அரசாணையை விதைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், வளர்த்தவர் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். முதலமைச்சருடைய இந்த அரசாணைமூலமாக ஐவ்வாது மலையே இன்றைக்கு சமூக நீதி வாசம் வீசிக் கொண்டி ருக்கின்றது என்பதை நான் பெருமையோடு எடுத்துச் சொல்வேன். கட்டமைப்பு என்று வரும்பொழுது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு நூலகத்தை எழுப்பியதன்மூலம், அதில் தன்னுடைய இரு விழிகளையும் இழந்த சகோதரர் ஸ்ரீகாந்த் என்பவர் போட்டித்தேர்விலே பங்குபெற்று இன்றைக்கு அவரும் தேர்வு செய்யப்பட்டு, இன்றைக்கு ஒரு வங்கியினுடைய துணை மேலாளராக பணியாற்றுகிறார் என்கின்ற அந்தப் பெருமையும், எங்களுடைய திராவிட மாடல் அரசினுடைய நாயகர் முதலமைச்சர் அவர்களுக்கு உரியது.

மதுரை மாவட்டம், திருமங்கலம் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு, புதிய அலுவலகம் கட்டுவதற்கு உரிய இடத்தினை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இடம் தேர்வு செய்யப்பட்டவுடன், கட்டடத்திற்கான செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, விரைவில் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டார்.

**பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வன்:** திருமங்கலம் தொகுதி, திரும ங்கலத்திலுள்ள மாவட்டக் கல்வி அலுவலகம், திருமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இயங்கி வருவதால், அங்கு புத்தகங்கள், சீருடைகள் போன்ற பொருட்களை வைப்பதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. அங்கே பணிபுரியும் அலுவலர்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் சிரமமாக இருப்பதால், உடனடியாக இடத்தைத் தேர்வு செய்து, புதிய மாவட்டக் கல்வி அலுவலகத்தைக் கட்டித் தர வேண்டும்.

**அமைச்சர்: அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், உடனடியாக அதற்கான இடம் பார்க்கின்ற வேலையில் நாங்கள் இறங்கியிருக்கின்றோம். கண்டிப்பாக, உடனடியாக நாங்கள் அதைக் கட்டித் தருவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

நகராட்சியில் புதிய வார்டுகள் இணைக்கப்பட்டுள்ளதால்

# திருப்பத்தூரில் காவிரி குடிநீர்த் திட்டம் விரிவாக்கம் செய்யப்படுமா?

## பேரவையில் அ.நல்லதம்பி கேள்வி!



சென்னை, பிப். 16 -

திருப்பத்தூர் நகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட அனைத்து வார்டுகளிலும் காவிரி குடிநீர் திட்டம் விரிவாக்கம் செய்யப்படுமா என்று சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் திருப்பத்தூர் ஏ. நல்ல தம்பி வினா எழுப்பினார்.

இதுகுறித்த வினா - விடை வருமாறு:

**ஏ.நல்லதம்பி:** (அ) திருப்பத்தூர் நகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட அனைத்து வார்டுகளுக்கும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தினை விரிவாக்கம் செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் கே.என். நேரு:** (அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் நகராட்சி எல்லையை விரிவாக்கம் செய்யும்பொழுது, திருப்பத்தூரை ஒட்டியுள்ள ஊராட்சிகளை நகராட்சியுடன் இணைக்கப்பட்டு, வார்டுகளின் எண்ணிக்கை 31-லிருந்து 36 வார்டுகளாக உயர்த்தப்பட்டன. எனவே, குடிநீர்த் தேவை கணக்கீட்டின்படி ஏற்கெனவே நகராட்சிப் பகுதியாக இருந்த 31 வார்டுகளுக்கு நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் 5.84 MLD காவிரி குடிநீர் வழங்கப்படுகிறது.

மேலும், திருப்பத்தூர் நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட 5 ஊரகப் பகுதிகளைச் சார்ந்த வார்டுகளுக்கும் நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு 40 லிட்டர் வீதம் அனைத்து வார்டுகளும் பயன்பெறும்வகையில் காவிரி குடிநீர் மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி வரை வழங்கப்பட்டு, நகராட்சி மூலமாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஏ.நல்லதம்பி:** முதலமைச்சர் அவர்களையும், அமைச்சர் பெருமக்களையும் வணங்குகின்றேன்.

திருப்பத்தூர் தொகுதிக் குட்பட்ட திருப்பத்தூர் நகராட்சி என்பது பழமையான அதிக பரப்பளவைக் கொண்ட நகராட்சியாகும். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட தைப்போல, ஊரகப் பகுதிகளிலிருந்து 5 நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட வார்டு எண்கள் 30, 31, 32, 36, 3வது வார்டு பகுதிகளிலுள்ள சிவராஜ் பேட்டை, பி.கே. நகர், வெங்கடேஷ்வரா நகர், ஆரிப் நகர், காயிதேமில்லத் நகர், குள்ளாச்சாரி வட்டம், திருமால் நகர் ஆகிய பகுதிகளில் சுமார் 10,000 மக்கள் வசித்து வருகின்றார்கள். அந்தப் பகுதியில் இதுநாள் வரையில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் விரிவாக்கம் செய்யப்படவில்லை. அதற்கான குழாய்கள் பதிக்கப்படவில்லை. அங்கு தேவையான நீராதாரமும் உள்ளதால், அந்தப் பகுதிகளில் புதிய பைப் லைன்களை அமைத்து, அமைச்சர் அவர்கள் குடிநீர் விநியோகத்தைச் சரி செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** நீராதாரம் இருக்கும்பட்சத்தில் நிச்சயமாக மற்ற வார்டுகளிலும் பைப் லைன்கள் பதிக்கப்பட்டு அனைவருக்கும் எப்படி நகரத்தில் குடிநீர் தரப்படுகிறதோ, அதே அளவுக்கு குடிநீர் வழங்க நவடடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

**ஏ.நல்லதம்பி:** திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி துவக்கப்பட்டு வெள்ளி விழா, பொன் விழா, பவளவிழா கடந்து நூற்றாண்டு விழாவை காணுகின்ற தருவாயிலுள்ள பழமையான நகராட்சியாகும். இந்த நகராட்சி அலுவலகம் 65 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. 36 வார்டுகளை உள்ளடக்கிய சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் தொகை கொண்ட நகராட்சியை நம்முடைய கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நவீன வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** இதுபோன்ற கோரிக்கைகளை உறுப்பினர்கள் பல்வேறு பகுதிகளிலே தெரிவித்திருக்கின்றார்கள். இருக்கின்ற நிதிநிலைக்கேற்ப அந்த நகராட்சியிலே புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு வாய்ப்பிருக்குமானால், இந்த ஆண்டு அறிவிக்கும் போதே அது அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.